# குருத்து ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# *2025-04-13*

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்: 50:4-7,*

*பதிலுரைப்பாடல் 22: 7-8, 16-19,22-23,*

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2: 6- 11.,*

*லூக்கா எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் திருப்பாடுகள்: 22: 14-23:56)*

***திருப்பலி முன்னுரை***

*கிறிஸ்துவுக்குரியவர்களே, நம் ஆண்டவர் இயேசுவின் பெயரால் திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு திருவழிபாட்டு நிகழ்வுகளுக்கு உங்களை வரவேற்கின்றோம். கழுதைக்குட்டி மீது தொடங்கும் கிறிஸ்துவின் பயணம் சிலுவை மரத்தில் முடிவடைந்ததை இன்று நாம் தியானிக்க இருக்கிறோம். 'ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக!' என்று ஆர்ப்பரித்து இயேசுவை அரசராய் வரவேற்ற அதே இஸ்ரயேல் மக்கள், 'அவனை சிலுவையில் அறையும்!' என்ற கூக் குரலால் அவரை மரணத்துக்கு தீர்ப்பிடுவதைக் காண்கிறோம். கிறிஸ்துவின் பாடுகளின் பயணத்தில் பங்கேற்று, நமது பாவங்களுக்காக மனம் வருந்த திருச்சபை நமக்கு அழைப்பு விடுக்கிறது. நம் மீது கொண்ட அன்பிற்காக தன்னையே சிலுவையில் பலியாக்கி, நற்கருணையில் உணவாக வழங்கும் இயேசுவின் அன்பை சுவைக்க நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் அன்புக்கு பதிலன்பு செலுத்தும் உண்மையுள்ள சீடர்களாக வாழும் வரம் கேட்டு, இந்த திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கேற்போம்.*

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*இறைவா! எம் தந்தையே!*

*எமது இறைவன் இயேசுவின் ஒவ்வொரு கட்டத்திலும் நீர் துணை நின்றது போல எமது திருஅவையிலும், அதன் பொறுப்பாளர்களிலும் உமது பெருந்துணை தொடர இன்னும் மிகுந்திட அருள்புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*தாய் தந்தை எம்மைத் தள்ளிடினும், தளராப் பெருமனம் கொண்ட இறைவா!*

*உமது திருமகனின் திருப்பெயரைக் கூட உச்சரிக்கத் தகுதியில்லா எம்மை, அவரோடு தொடர்ந்து இணைத்திட அவரில் இயைந்திட அருள் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*மாட்சியின் இறைவா!*

*உம் உயிரான இயேசுவின் பாடுகளின் வாயிலை நெருங்கியுள்ள நாங்கள். அவரின் எல்லாப் பாடுகளிலும் பங்கு கொண்டே, அவரது மாட்சியிலும் பங்கெடுத்திட வேண்டும் என்ற உள்ளார்ந்தப் புரிதலை எமக்கருள இறைவா உம்மை வேண்டுகிறோம்.*

*ஏற்றமிகு இறைவா!*

*கடவுள் வடிவில் விளங்கிய எம்மவர், தம்மையே வெறுமையாக்கி, எமது நிலைக்கு ஒப்பானது போல, நாங்களும் எமது மானுடத்தில் இறைமகனை ஏற்ற முறையில் வெளிக்கொணர அருள் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*வாழ்வே இறைவா!*

*'இயேசு' என்ற பேராண்மையை எம்மில் வார்த்தருளும் அவரால் வாழ்வும் வளமும் பெற்று நாங்கள் அவரின் ஒப்பற்ற ஊடகங்களாக உலாவர அருள்புரிய இறைவா உம்மை வேண்டுகிறோம்.*

இரக்கம் காட்டுபவராம் இறைவா,

எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வு அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.